**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**
**மதுரை மாநகராட்சி**

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2012-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் :** ***" அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்***
***அஃது அறி கல்லா தவர் "***

**பொருள் :** அறிவுடையார் எதிர்காலத்தில் நிகழக்கூடியதை முன்னதாகவே அறிய வல்லவர். அறிவில்லாதவர் அதனை முன்னதாக அறியும் ஆற்றல் இல்லாதவர்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) சி.டபிள்யு.2/ 39280/2011**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **07.03.2012**-ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.155**
**பதிவு செய்யப்பட்டது**

**2) சி.டபிள்யு.2/ 000307/2012**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி **21.03.2012**-ம் தேதி நடைபெற்ற நகரமைப்புக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.156**
**பதிவு செய்யப்பட்டது**

**3) சி.டபிள்யு.2/ 007036/2012**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **26.03.2012**-ம் தேதி நடைபெற்ற கணக்கு குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கணக்கு குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.157**
**பதிவு செய்யப்பட்டது**

**4) B1/010122/12**

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிதித்துறை அரசு ஆணை எண். 116, நாள் 09.04.2012 –ன் பிரகாரம் தமிழ்நாடு அரசு ஊழியர்களை போல் 01.01.2012 முதல் அகவிலைப்படி 58 சதவிகிதத்திலிருந்து 65 சதவகிதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசு ஆணைப்படி மாநகராட்சி அலுவலர் மற்றும் ஊழியர்களுக்கு அகவிலைப்படி நிலுவை வழங்குவதற்கு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு : உத்தேச செலவு ரூ 70-லட்சம்**

**மாமன்றத்தீர்மானம் எண்.158**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) H3/002423/2012**

மதுரை மாநகராட்சி 2012ம் ஆண்டு மே மாதம் நடைபெற உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத் திருவிழா அருள்மிகு கள்ளழகர் திருவிழாவிற்கும் மாட்டுத்தாவணிக்கும் வருகை தரும் பொது மக்களின் வசதிக்காக துப்புரவு பணிகள் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி,

மின் வசதி, தற்காலிய துப்புரவு ஊழியர்கள், ஊதியம், சாதனங்கள், கிருமி நாசினிகள், பிரச்சார விளம்பர பொருட்கள், தற்காலிக கொட்டகைகள் மற்றும் இதர செலவினங்களுக்காக பொது சுகாதாரப்பிரிவின் உத்தேச செலவினம் ரூ.2283000/- (இருபத்திரண்டு லட்சத்து எண்பத்தி மூன்றாயிரம் மட்டும்) மற்றும் பொறியியல் பிரிவின் உத்தேச செலவினம் ரூ.2500000/-(ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும் ) ஆகியவைகளுக்கு ஏற்படும் உத்தேச செலவு தொகை ரூ.4783000/- ( ரூபாய் நாற்பத்து ஏழு லட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் முதலாம் படிவ அறிக்கையை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு 07.03.2012-ல் அனுப்பட்டதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| **வ.எண்** | **உத்தேச செலவினங்களுக்கு ஏற்படும் பணிகள் விபரம்** | **தொகை : ரூ** |
|---|---|---|
| **1** | கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்கு ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் தற்காலிக பாலம் அமைத்தல் மற்றும் தடுப்புகள் அமைத்தல் | 1500000 |
| **2** | கள்ளழகர் ஆற்றில் இறங்கும் இடம் மற்றும் இராமராயர் மண்டபத்தில் மின்சார வசதி செய்தல் | 500000 |
| **3** | சித்திரை திருவிழாவிற்கு வரும் பொது மக்களின் குடிநீர் வசதிக்காக தற்காலிகமாக 50 இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 500000 |
| **4** | துப்புரவு பணி தற்காலிக தினச்சம்பள ஊழியர்கள் சம்பளம் | 608000 |
| **5** | துப்புவு பணி சாதனங்கள் | 600000 |
| **6** | துப்புரவு பணி கிருமி நாசினிகள், பூச்சிக்கொல்லிகள், சுண்ணாம்புதூள் மருந்துகள் | 1000000 |
| **7** | பிரச்சார விளம்பரம் தொடர்பான செலவினம் | 50000 |
| **8** | துப்புரவு பணி சம்பந்தமாக எதிர்பாராமல் ஏற்படும் அவசர செலவினங்களுக்கு முன்பணம் | 25000 |
| | **மொத்தம் செலவினங்கள்** | **4783000** |

**மாமன்றத்தீர்மானம் எண்.159**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 6) JnS4/26631/07

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டப்பிரிவில் – வேளாண்மை பொறியியல் துறையிலிருந்து அயற்பணியில் பணிபுரியும் உதவிப்பொறியாளர்களை காலம் 3–ல் குறிபிட்ட தேதியில் அயற்பணிகாலம் முடிவுற்றதன் பேரில் திட்டப்பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்ட அலுவலர்களின் பணிக்காலத்தை காலம் 4–ல் கண்ட விபரப்படி உள்ள காலங்களுக்கு அயற்பணி நீட்டிப்பு கோரி சம்பந்தப்பட்ட துறைக்கு கடிதம் அனுப்பி வைக்க மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | அயற்பணி முடிவுற்ற நாள் | அயற்பணி நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.தேவராஜன்,<br>உதவிப்பொறியாளர் | 31.08.2011 | 01.09.2011 முதல்<br>31.08.2012 வரை |
| 2 | திரு.ந.செவ்வேல்<br>உதவிப்பொறியாளர் | 20.01.2012 | 21.01.2012 முதல்<br>20.01.2013 வரை |
| 3 | திரு.அ.சொக்கலிங்கம்<br>உதவிப்பொறியாளர் | 10.01.2012 | 11.01.2012 முதல்<br>10.01.2013 வரை |

**மாமன்றத்தீர்மானம் எண்.160**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 7) E1/8167/2012

மதுரை மாநகராட்சி 72 வார்டுகளை கொண்டு செயல்பட்டு வந்த நிலையில் 01.10.1996 முதல் அரசாணை (நிலை) எண். 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996-ன்படி அடிப்படையில் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

அரசாணை எண். 220 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.09.2010-ன்படி இம்மாநகராட்சியுடன் III-ம் நிலை நகராட்சிகள் (அவனியாவுரம், ஆனையூர், திருப்பரங்குன்றம்) 3 பேரூராட்சிகள் (ஹார்விப்பட்டி, திருநகர், விளாங்குடி) மற்றும் 11 கிராம ஊராட்சிகள் (மேலமடை, உத்தங்குடி, வண்டியூர், கண்ணனேந்தல், நாகனாகுளம், திருப்பாலை, சின்ன அனுப்பானடி, சிந்தாமணி, ஐராவதநல்லூர், புதுக்குளம் பிட் II, தியாகராயர் காலனி) ஆகிய இணைப்பு பகுதிகளை கொண்ட 28 வார்டுகளுடன் 100 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 24.10.2011 முதல் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மதுரை மாநகராட்சி மண்டலம் 72-லிருந்து 100 வார்டுகளாக எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுடன் ஏற்கனவே மதுரை மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட பணி இடங்களை கீழ்காணும் அட்டவணையின்படி 1996- மதுரை மாநகராட்சி பணிவிதிகளின்படி உள்ள இணையான பணியிடங்களை ஈர்த்துக் கொள்வது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு :**

மதுரை மாநகராட்சியுடன் ஒருங்கிணைப்பட்ட **3** நகராட்சிகள், **3** பேரூராட்சிகள் மற்றும் **11** ஊராட்சிகளில் உள்ள பணியிடங்களை மதுரை மாநகராட்சியுடன் ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் பணிபுரிந்து வரும் பணியாளர்களை மாநகராட்சி பணியில் ஈர்த்துக் கொள்தல் – பட்டியல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.161**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 8) H1/29690/2011

மதுரை மாநகராட்சியின் கீழ் இயங்கிவரும் மகப்பேறுமனைகளில் பார்க்கப்படும் மகப்பேறுகளுக்கு அவசர சிகிச்சைக்காக ரத்த சேமிப்பு வங்கி மிகவும் அவசியமாக

தேவைப்படுவதால், பொது மக்களின் நலன் கருதி மதுரை மாநகராட்சியில் கே.புதூர் மகப்பேறுமனை மற்றும் EOC மகப்பேறுமனை மகபூப்பாளையம் ஆகியவற்றில் ரத்த சேமிப்பு வங்கி (Blood Storage Unit) அமைப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.162</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**9) <u>ம.வ.1/39580/2007</u>**

மதுரை மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள விரிவாக்கப்பகுதியில் உள்ள வார்டுகளில் உள்ள காலிமனைகளுக்கு மூன்று நகராட்சிகள், மூன்று பேரூராட்சிகளுக்கு ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் வரி விகிதத்திலேயே பொட்டல் வரி நிர்ணயம் செய்வது என்றும், ஏனைய 11 ஊராட்சிகளுக்கு அரசாணை.(பல்வகை) எண்.151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் :20.08.2009 வரிசை எண்.(அ) நிலை A அடிப்படையில் சதுர அடி **1–**க்கு **0.**40 பைசா வீதம் மாநகராட்சியில் இணைந்த நாள் முதல் காலிமனை வரி விதிப்பு செய்யவும், வருவாய் இழப்பை தவிர்க்க விரிவாக்கப் பகுதிகளுக்கு சொத்துவரி விதிப்பது சம்பந்தமாக அரசிமிருந்து அறிவுரை பெறப்படும் வரை மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள வார்களுக்கு விதிக்கப்பட்டு வரும் சொத்துவரி கணக்கீடு அடிப்படையில் மிகவும் குறைந்த வரிவிதிப்பான 'D' வகுப்பில் கணக்கிடப்பட்டு வரி விகிதம் 20% அடிப்படையில் தற்காலிகமாக சொத்துவரி விதிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

அரசிடமிருந்து பெறப்படும் அறிவுரைகளுக்கு தகுந்தவாறு மாறுதலுக்குட்டது என்ற நிபந்தனையுடன் சொத்துவரி ' D' வகுப்பில் நிர்ணயம் செய்யலாம் என்ற தகவலை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.163</u>**

**<u>அடுத்த மாமன்ற கூட்டத்தில் பொருள் வைக்க குறிப்பு ஒத்தி வைக்கப்பட்டது</u>**

**10) <u>ம.வ (1/ 007401/2012 (CW3)</u>**

மதுரை மாநகராட்சி **2 –**ல் அமைந்துள்ள புதுநத்தம் ரோடு, ரேஸ்கோஸ் சாலை சந்திப்பில் உள்ள பி.டி.ஆர் சிலையில் ஆரம்பித்து செட்டிக்குளம் வரை அமைந்துள்ள புதுநத்தம் சாலை என்ற பெயரை செந்நாப்புலவர் கார்மேகனார் சாலை என பெயர் மாற்றம் செய்ய கோரப்பட்டுள்ளது.

தெருக்கள் பெயர் மற்றும் சாலைகள் பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக அரசாணை (நிலை) எண். **113** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **30.06.1998 –**ல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் புதிதாக பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது போன்ற தீர்மானங்களை அரசுக்கு அனுப்புவதை தவிர்க்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

இருப்பினும் அரசாணை (நிலை) எண். **113** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:30.06.1998 **–**ஐ விலக்களித்து பி.டி.ஆர் சிலையில் ஆரம்பித்து செட்டிக்குளம் வரை அமைந்துள்ள புதுநத்தம் சாலை என்ற பெயரை செந்நாப்புலவர் கார்மேகனார் சாலை என பெயர் மாற்றம் செய்வதை சிறப்பினமாக கருதி பெயர் மாற்றம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.164</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**11) H3/10196/07**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா **15** நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு **60** நபர்களை வேலை வாய்ப்பு துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் ஆள் எடுப்பு போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக **60** நபர்கள் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 11.01.2012ல் முடிவடைந்து விட்டது. பொது மக்கள் நலன் கருதியும் மீண்டும் பணியினை தொடரவும் 13.01.2012 முதல் 89 நாட்களுக்கு பணியிணை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி பணிக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்.165**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) வி.வி.ராஜன்**

**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**செல்லப்பா,**
**மதுரை**
**நாள் : 17.04.2012**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2012-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் புதன்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) ந.க.எண்.A3/002101/12**

பாண்டியன் நெடுஞ்செழியன் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்த பொது மக்கள் பங்குத் தொகையாக ரூ.**2,00,000/-** (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அரசுக்கு மதுரை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.166**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2) ம.ந.1/003665/12**

திண்டுக்கல் நகராட்சியில் பணிபுரிந்து வரும் திருமதி.ச.சுசீலாமேரி, நகர சுகாதார செவிலியர் அவரது குடும்ப சூழ்நிலை கருதி மதுரை மாநகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் கோரி மனு செய்துள்ளதின் பேரில், அவரை இம்மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் செய்வது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

1. மதுரை மாநகராட்சி பணியாளர்களின் செலவினம் 57% (அரசு கடிதத்தில் தெரிவித்துள்ள பணியாளர்களின் செலவினம் 49%-க்கு மேல்)
2. மேற்கண்ட பணியாளர் இம்மாநகராட்சியில் ஒருவழிப் பணிமாறுதலில் வரும்பட்சத்தில் அவரை நகர சுகாதார செவிலியர் (UHN) பணியிடத்தில் கடைசி நபராக சேர்க்கப்படும்.
3. மேற்கண்ட பணியாளரை திண்டுக்கல் நகராட்சியிலிருந்து ஒரு வழி பணிமாறுதலில் மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய திண்டுக்கல் நகராட்சியில் தீமானம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
4. மேற்கண்ட பணியாளரை ஒருவழி பணிமாறுதல் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையாளரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

5. இப்பணிமாறுதலுக்கு பயணப்படி வழங்கப்பட மாட்டாது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.167</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>3) மநி 2/ 010766 /2012</u>**

திருமதி.எம்.வனிதாதேவி, இளநிலை உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் அவர்கள் சென்னை மாநகராட்சியில் 29.01.1996 அன்று பதிவுரு எழுத்தராக பணியில் சேர்ந்தவர் 29.01.1996 முதல் பணிவரன்முறையும் 29.01.1998 முதல் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராகவும் அறிவிக்கப்பட்டு, 18.06.2001 முதல் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இளநிலை உதவியாளர் பணியிடத்திலும் 18.06.2001 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் 29.01.1996 முதல் இந்நாள் வரை 14 வருடங்கள் 3 மாதங்களுக்கு மேலாக பணிபுரிந்துள்ளார். தனியர் தற்போது இளநிலை உதவியாளர் பதவியில் ரூ.7970+2000GP என அடிப்படை ஊதியம் பெற்று வருகிறார்.

| | | |
|---|---|---|
| **தனியரின் கல்வித்தகுதி** | **–** | **பத்தாம் வகுப்பு தேர்ச்சி** |
| **தட்டச்சு படிப்பு** | **–** | **ஆங்கிலம் இளநிலை தேர்ச்சி மற்றும் தமிழ் இளநிலை தேர்ச்சி** |

இந்நிலையில் தனியர் மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஒருவழி பணிமாறுதலின் கீழ் பணிமாறுதல் செய்ய விரும்புவதாகவும், மதுரை மாநகராட்சி இளநிலை உதவியாளர் பதவியில் இளையவராக பணியாற்ற விருப்பம் எனவும் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் தனியர் மீது எந்தவித விசாரணை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி விதி 1971-ன்படியும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண்.27274/மாந5/96-1 நாள் 08.07.1996–ன்படி திருமதி.எம்.வனிதாதேவி, இளநிலை உதவியாளரை ஒரு வழி பணிமாறுதல் மூலம் மதுரை மாநகராட்சி இளநிலை உதவியாளர் பணியிடத்தில் இளையவராக நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>நிபந்தனைகள் :</u> –**

1) இப்பணியாளர் மதுரை மாநகராட்சியில் பணிமாறுதலுக்குப்பின் தனது பதவிக்கான பணியில் இளையவராக கருதப்படுவார்.
2) தனியர் சென்னை மாநகராட்சியில் கடைசியாக பெற்று வரும் ஊதியத்துடன் நடைமுறையில் உள்ள அவ்வப்பொழுது வழங்கப்படும் அசராணைகளின்படி, படிகளையும் பெற அனுமதிக்கப்படுவர்.
3) தனியர் தனது ஊதியத்தினை மதுரை மாநகராட்சி பணியாளர்களுடன் ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.168</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>4) மநி 5/38194/2010</u>**

மதுரை மாநகராட்சி தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கத்தில் பொருட்காட்சி மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்திக் கொள்வதற்கு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. 2011-க்குப் பின்னர் வாடகை மற்றும் வைப்புத் தொகை உயர்வு செய்யப்படாமல் உள்ளது.

மாநகராட்சி வருவாயை கருத்தில் கொண்டு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை மற்றும் வைப்புத் தொகையை கீழ்கண்டவாறு உயர்வு செய்யலாம்.

| இடம் | தற்போது விடப்பட்டு வரும் வாடகை விபரம் (ஒரு நாள்) | புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விபரம் (ஒரு நாள்) |
|---|---|---|
| தமுக்கம் மைதானத்தில் வணிகம் மற்றும் விளம்பர நோக்கத்திற்கு | 30,000 | 50,000 |
| தமுக்கம் மைதானம் தனிப்பட்ட உபயோகத்திற்கு | 20,000 | 35,000 |
| தமுக்கம் மைதானத்திலுள்ள கலையரங்கம் வணிகம் மற்றும் விளம்பர நோக்கத்திற்கு | 18,000 | 30,000 |
| தமுக்கம் மைதானத்திலுள்ள கலையரங்கம் தனிப்பட்ட உபயோகத்திற்கு | 15,000 | 25,000 |
| தமுக்கம் மைதானம் வைப்புத் தொகை | 50,000 | 50,000 |
| தமுக்கம் மைதானத்திலுள்ள கலையரங்கம் வைப்புத் தொகை | 20,000 | 25,000 |

எனவே வாடகை மற்றும் வைப்புத் தொகையை மேற்கண்டவாறு உயர்வு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.169**

**பொருளில் குறிப்பிட்டுள்ள புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையில் 10% குறைத்து நிர்ணயிக்க குறிப்பு ஒப்புக்ககொள்ளப்பட்டது**

## 5) JNS 2 / 32922 / 2006

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சிக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் 22766 வீடுகள் கட்ட அனுமதி பெறப்பட்டு தகுதியான பயனாளிகளைத் தேர்வுசெய்து, பயனாளி ஒவ்வொருவருக்கும் பயனாளியின் பங்குத்தொகை போக மானியத்தொகையாக பகுதி–I, பகுதி–II-க்கு ரூ.80960/–ம் பகுதி–III-க்கு ரூ.100000/– (ஒரு லட்சம் மட்டும்) வழங்கி வருகின்றது. இத்திட்டத்தில் ஏற்கனவே 72 வார்டுகளில் உள்ள குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு மூன்று பகுதிகளாக திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் ROC No.2882/2011/IHSDP2 Dated : 21.02.11 அன்று பெறப்பட்ட உத்திரவின்படி மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு புதியதாக சேர்க்கப்பட்ட 28 வார்டுகளில் உள்ள குடிசைப்பகுதிகளிலும் தகுதிவாய்ந்த பயனாளியைக் கண்டறிய உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மதுரை மாநகராட்சியின் 100 வார்டுகளிலும் உள்ள குடிசைப்பகுதிகளில் பகுதி II மற்றும் பகுதி III-க்கும் தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறிந்து பணி உத்தரவு வழங்கி திட்ட இலக்கினை விரைந்து அடைந்திட மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.170**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 6) மரு .1/011084/2012

மதுரை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால் தற்போது சுமார் 15.61 லட்சம் மக்கள் தொகை உள்ளனர். இதில் 5 முதல் 10% மக்கள் சிறுநீரக செயல் இழப்பு, நாள்ப்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இவர்களுக்கான

Dialysis சிகிச்சை முறை மிக குறைந்த கட்டணத்தில் ஏழைகள் பயன்பெறும் வகையில் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எங்கும் இல்லை. இதனால் பலர் இன்னலுற்று வருவதாகவும், அவர்கள் முறையான சிகிச்சை பெற இயலாமல் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

எனவே மதுரை மாநகர மக்களின் நலன் கருதி ஐந்து Dialysis இயந்திரங்களை கொண்ட ஒரு Dialysis மையம் மதுரை மாநகராட்சி மண்டல அலுவலக எண். 4 அமைந்துள்ள கட்டிடத்தின் கீழ் தளத்தில் அமைத்து அங்கு பணியாற்ற தேவையான மருத்துவ அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.171</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>7) ம.பொ.1/35385/11</u>**

மதுரை மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகள் மற்றும் மாநகராட்சி பழைய பகுதிகளில் குப்பை அகற்ற மதுரை மாவட்ட வேளாண்மை பொறியியல் சேவைக் கூட்டுறவு சங்கம் லிட்., கூடல்நகர், மதுரை அக்ரோ சர்வீஸ் நிறுவனத்தின் மூலம் தினமும் 25 டிராக்டர்கள் டிரெய்லர் மற்றும் டிராக்டர் ஓட்டுனரை அமர்த்தி குப்பைகளை அகற்ற அக்ரோ நிறுவனம் சப்ளை செய்யும் டிராக்டர்களுக்கு நாள் ஒன்றுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறையின் வாடகை உத்தரவின்படி மணி ஒன்றுக்கு டீசலுடன் ரூ.300/- என்ற விகிதத்தில் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்கு (8x300=2400/- ரூபாய் இரண்டாயிரத்து நானூறு மட்டும்) வாடகையாக நிர்ணயம் செய்து சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.172</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>8) ம.பொ. 4/ம.எண். 1(IUDM)/ 2011-12</u>**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை நிறைவேற்றப்பட்டு பழுதடைந்த சாலைகளிலும், இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் மெயின் குழாய் புதைக்கப்பட்ட சாலைகள் மற்றும் வெள்ள சேதத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ள " ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2012"ன் கீழ் மேற்படி சாலைகளை சீர் செய்ய ரூ.83.14 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, கடந்த 30.01.2012 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண்.101, நாள் :30.01.2012) ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டு (ந.க.எண். 47923/2011/E3, நாள். 01.02.2012) நடப்பு நிதியாண்டில் முதற்கட்டமாக சாலைகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண். | சாலை– யின் வகை | மதிப்பீட்டு விபரம் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்–காரர் ஒப்பந்தப்–புள்ளியில் தெரிவித்த விலை விகிதம் | ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொண்ட சம்மத விலை விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | 9 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 1/11–12 | திரு.P. முரளி | 92.00 | 4.92% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 2. | 10 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 2/11–12 | திரு.P. முரளி | 93.10 | 4.93% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 3. | 9 & 13 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 3/11–12 | திரு.T.A.G. காமராஜ் | 89.60 | 4.94% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 4. | 13 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 4/11–12 | திரு. பழனிக் குமார் | 99.30 | 9.02% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 5. | 35 & 39 | தார் சாலை & சிமெண்ட் கான்கிரீட் சாலை | ம.பொ.4/ம.எண். 5/11–12 | திருமதி. தேன் மொழி | 90.40 | 4.78% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 6. | 36 & 37 | தார் சாலை & சிமெண்ட் கான்கிரீட் சாலை | ம.பொ.4/ம.எண். 6/11–12 | திரு.T.A.G. காமராஜ் | 76.20 | 4.90% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 7. | 41 & 44 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 7/11–12 | திரு. ராஜா முகமது | 95.00 | 4.58% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 8. | 45 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 8/11–12 | திரு.K. முருகேசன் | 41.00 | 2.05% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 9. | 47 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 9/11–12 | திரு.R. விஷ்ணுராஜ் | 96.00 | 7.12% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 10. | 50 | பேவர் பிளாக் சாலை | ம.பொ.4/ம.எண். 10/11–12 | திரு. மணிவண்ணன் | 52.00 | 4.98% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 11. | 51 & 54 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 11/11–12 | திரு.P. முரளி | 98.00 | 3.58% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 12. | 52 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 12/11–12 | திரு. விஜயகுமார் | 54.00 | 4.92% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 13. | 68 & 74 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 13/11–12 | திரு. அருள்ராஜ் | 100.00 | 4.91% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 14. | 68,72 & 74 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 14/11–12 | M/s. பாப்பா பில்டர்ஸ் | 91.45 | 7.14% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 15. | 76 & 78 | தார் சாலை & சிமெண்ட் | ம.பொ.4/ம.எண். 15/11–12 | திரு. சந்திரன் | 90.60 | 8.92% கூடுதல் | 4.90% கூடுதல் |

| வ. எண். | வார்டு எண். | சாலை–யின் வகை | மதிப்பீட்டு விபரம் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்–காரர் ஒப்பந்தப்–புள்ளியில் தெரிவித்த விலை விகிதம் | ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொண்ட சம்மத விலை விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | | கான்கிரீட் சாலை | | | | | |
| 16. | 78 | பேவர் பிளாக் சாலை | ம.பொ.4/ம.எண். 16/11–12 | திரு. மணிவண்ணன் | 84.22 | 5.13% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 17. | 79 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 17/11–12 | திரு.P. நெடுஞ்செழிய பாண்டியன் | 74.75 | 4.88% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 18. | 81 & 82 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 18/11–12 | திரு.P.M.T. மோகன் | 57.40 | 5.76% கூடுதல் | 2.00% கூடுதல் |
| 19. | 93 | தார் சாலை | ம.பொ.4/ம.எண். 19/11–12 | M/s. பாண்டியன் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி | 75.60 | 6.62% கூடுதல் | 2.00% கூடுதல் |

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற பணிகளுக்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சம்மத விலை விகிதத்தினை ஏற்று மேற்படி ஒப்பந்தக்காரர்களுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.173</u>
<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## 9) ம.பொ.4/ம.எண். 20 (IUDM)/ 2011-12

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு ”ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2012”ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு ரூ.40.13 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் கடந்த 30.01.2012 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண். 101, நாள். 30.01.2012) ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டு (ந.க.எண். 47923/2011/E 3, நாள். 01.02.2012) நடப்பு நிதியாண்டில் முதற்கட்டமாக திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:

| **வ. எண்.** | **மதிப்பீட்டு விபரம்** | **ஒப்பந்தக்காரர் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)** | **ஒப்பந்தக்–காரர் ஒப்பந்தப் – புள்ளியில் தெரிவித்த விலை விகிதம்** | **ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொண்ட சம்மத விலை விகிதம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| 1. | ம.பொ.4/ம.எண். 20/11–12 டம்பர் பின் (SS) – 400 எண்ணம் மற்றும் காம்பேக்டர் பின் (SS) – 125 எண்ணம் | M/s. N.S. Rama Rao Body Works | 317.50 | 1.11% கூடுதல் | 0.44% குறைவு |
| 2. | ம.பொ.4/ம.எண். 25/11–12 காம்பேக்டர் வாகனம் – 2 எண்ணம் | M/s. TPS Infrastrcuture Limited | 53.00 | 6.23% குறைவு | 6.42% குறைவு |

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற இரண்டு பணிகளுக்கும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சம்மத விலை விகிதத்தினை ஏற்று மேற்படி ஒப்பந்தக்காரர்களுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.174</u>**

**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>10) ம.பொ.4/ம.எண். 22 (IUDM)/ 2011-12</u>**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு ”ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2012”ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு ரூ.40.13 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் கடந்த **30.01.2012** அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண். 101,நாள்.30.01.2012) ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டு (ந.க.எண். 47923/2011/E3, நாள். 01.02.2012) நடப்பு நிதியாண்டில் முதற்கட்டமாக திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட பணிகளில் கீழ்க்கண்ட மூன்று பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி முதலாவது அழைப்பில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தினால் இரண்டாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:

| **வ. எண்.** | **மதிப்பீட்டு விபரம்** | **ஒப்பந்தக்காரர் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)** | **ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவித்த விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| 1. | ம.பொ.4/ம.எண். 22/11–12 டம்பர் பிளேசர் வாகனம் – 17 எண்ணம் | M/s. TATA Motors Limited | 208.25 | 26.16% கூடுதல் |

| வ. எண். | மதிப்பீட்டு விபரம் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவித்த விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 2. | ம.பொ.4/ம.எண். 23/11–12 டம்பர் பிளேசர் வாகனம் – 17 எண்ணம் | M/s. TATA Motors Limited | 208.25 | 26.16% கூடுதல் |
| 3 | ம.பொ.4/ம.எண். 24/11–12 டம்பர் பிளேசர் வாகனம் – 16 எண்ணம் | M/s. TATA Motors Limited | 196.00 | 26.15% கூடுதல் |

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற பணிகளுக்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் தெரிவிக்கப்பட்ட கூடுதல் விலை விகிதம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேற்படி ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும் மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையரக " **Tender Award Commitee** "-ன் ஒப்புதல் வேண்டி அனுப்பி வைப்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.175**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11) ம.பொ.4/ம.எண்.10603 /12**

மதுரை மாநகராட்சியில் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ள 28 வார்டுகளையும் சேர்த்து மதுரை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் மின் சப்ளை அளவு நாளுக்குநாள் அதிகரித்து வரும் நிலையில் (கழிவு நீரேற்று நிலையங்கள், குடிநீரேற்று நிலையங்கள், வரிவசூல் மையங்கள்) மாநகராட்சிக்கு அத்தியாவசிய பணிகள் நிறைவேற்ற அதிகளவில் மின்சாரம் தேவைப்படுவதால் சூரிய சக்தி மூலமாக மின்சார தயாரிப்பதற்கு தகுதியுள்ள நிறுவனங்களை தேர்வு செய்து அரசின் அனுமதி பெற்று அதன் பின் விலைப்புள்ளிகள் வரவழைத்து PPP முறையில் அமுல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.176**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12) ம.பொ.4/ம.எண்.11085/12**

மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள 72 வார்டுகளில் இருந்து அப்புறப்படுத்தப்படும் சுமார் 350 டன் குப்பைகளை உரமாக மாற்ற JNNURM திட்டத்தின் கீழ் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடியும் நிலையில் உள்ளது.

தற்போது மதுரை மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 28 வார்டுகளையும் சேர்த்து சுமார் 600 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது உள்ள ஒப்பந்தக்காரரால் நிறுவப்பட்ட குப்பையை உரமாக்கும் தொழிற்சாலை சுமார் 350 டன் குப்பைகளை மட்டும் பிரித்தெடுக்கும் தன்மை கொண்டது. எனவே அதிகப்படியாக சேகரிக்கப்படும் குப்பைகளில் இருந்து பயோ எத்தனால் (BIO Ethonal and E_ Diesel ) போன்ற எரிபொருளை தயாரித்து அதன் மூலமாக மின்சாரம் தயாரிக்க (Waste into Energy) தகுதியுள்ள நிறுவனத்திடமிருந்து முன்மொழிவு பெறவும், அரசின் ஒப்புதலை பெற்று, இத்திட்டத்தை அமுல் படுத்தவும், மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.177**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>13) ம.பொ.3/3810/12</u>**

மதுரை மாநகராட்சி என்.எம்.எஸ்.எம். உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தின் ஒரு பகுதியில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை) நலஅலுவலர் அவர்களின் கடிதத்தில் அரசாணை எண்.28, நாள் : 16.03.2012- (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை) தேதிய உத்தரவின்படி சிறுபான்மையினர் மாணவியர் விடுதி துவங்க அனுமதி கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற கடிதத்தை பரிசீலித்து என்.எம்.எஸ்.எம். உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடத்தில் விடுதி இயங்கவும் மாணவியர் நலனைக் கருத்திற் கொண்டு மாத வாடகை ரூ.6000/-(ஆறாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்தும் அனுமதி வழங்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.178</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>14) ம.பொ.7/Est.37427/10</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2 வார்டு எண்.**43–**ல் (பழைய வார்டு **11**) உள்ள ராஜாஜி பூங்காவின் உட்புறம் பூங்கா முருகன் கோயில் நிர்வாகத்தினரின் சொந்த செலவிலும், பொதுமக்களிடம் பெறப்படும் நன்கொடைகளிலும் திருமண மண்டபம் கட்டுவதற்கு மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே தீர்மானம் எண்.1025, நாள் :09.02.2011–ல் 60’0” x40’0” என்ற அளவில் காலியிடம் ஒதுக்கீடு செய்து மாமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆனால் அந்த இடம் போதுமானதாக இல்லை என்று, ஏற்கனவே ஒதுக்கீடு செய்த 60 அடி நீளத்திற்கு பதிலாக **100** அடி நீளத்திலும் **40** அடி அகலத்திலும் காலியிடம் ஒதுக்கீடு செய்து தருமாறு, கோயில் நிர்வாகத்தினர் கேட்டுகொண்டதற்கிணங்க 100’0’’x40’0’’ என்ற அளவில் காலியிடம் ஒதுக்கீடு செய்வதற்கும், பூங்கா முருகன் கோயில் நிர்வாகத்தினரின் சொந்த செலவிலும், பொதுமக்களிடம் பெறப்படும் நன்கொடையிலும் திருமண மண்டபம் கட்டுவதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.179</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**(ஒம்..) வி.வி.ராஜன்செல்லப்பா**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் :23.04.2012**
**மதுரை.**

* * * * * * * *

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

# Table Agenda

**1) ம.பொ.4.11221/2012**

மதுரை மாநகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் தெருவிளக்குகளை அமைப்பதற்கு மாமன்ற தீர்மான எண் : 103, நாள்: 30.01.2012-ல் மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு மாநகராட்சி நிர்வாக ஆணையகரத்திற்கு அனுப்பப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் தெருவிளக்கு பராமரிப்பு பணியில் மின்சேமிப்பு திட்டம் (Public Private Partnership Project Scheme) நடைமுறைப்படுத்தப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மதுரை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 28 வார்டுகளிலும் உள்ள 40W குழல் விளக்குகளுக்கு பதிலாக 20W எல்இடி போன்ற மின்விளக்கு பொருத்திடவும் மற்ற விளக்குகளில் மின்பயனீட்டு அளவை குறைப்பதற்கு மின்சக்தி சேமிப்பு உபகரணங்களை பயன்படுத்துவதன் மூலம் 30 சதவீதம் மின்சேமிப்பு செய்து மின் கட்டண செலவினத்தை Public Private Partnership மூலம் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் (**IUDM**) கீழ் புதிதாக 4000 எண்ணம் தெருவிளக்குகள் அமைப்பதற்கு கடந்த நிதி ஆண்டில் (2011–2012) ரூ.10 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2012–2013 நிதி ஆண்டிற்கு ரூ.3 கோடி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மண்டலம் | மின்சாதன மூலதன செலவு தொகை | பழைய தெருவிளக்கிற்கான பராமரிப்பு செலவினத் தொகை (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | 38165694 | 22,18,396 |
| 2 | 59427060 | 32,14,058 |
| 3 | 28163382 | 15,36,332 |
| 4 | 30554684 | 23,68,578 |
| **மொத்தம்** | **15,63,10,820** | **93,37,364** |

மதுரை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. தெருவிளக்குகளில் PPP scheme நடைமுறைப்படுத்த செலவு — ரூ.1563.00-லட்சம்
2. ஏணிவாகனம் (9மீ 4 எண்ணம் மற்றும் 13மீ 4 எண்ணம்) செலவு — ரூ. 240.00-லட்சம்
3. புதியதெருவிளக்கு அமைப்பதற்கு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தோராயச்செலவு — ரூ. 250.00–லட்சம்

**மொத்த செலவு தொகை ரூ 2053.00 லட்சம்**

தெருவிளக்குகளுக்காக தற்போது மின்சாரவாரியத்திற்கு செலுத்தப்படும் மின் பயனீட்டு அளவை குறைக்கும் நோக்கில் பரிட்சார்த்த முறையில் முதலில் மதுரை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதியில் நடைமுறைப்படுத்தும் வகையில் மதுரை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதியில் உள்ள 40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு பதிலாக 20W எல்.இ.டி போன்ற மின்விளக்குகளை பொருத்திடவும், மின்பயனீட்டு அளவைக் குறைப்பதற்கு தெருவிளக்கு சுவிட்சுகளில் மின்சக்தி சேமிப்பு உபகரணங்களை தேர்வு செய்யப்படும் நிறுவனம் மூலம் வழங்கி பொருத்தி இயக்கிப் பராமரிக்கவும், மற்றும் மதுரை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதியில் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளில் எரியாத தெருவிளக்கினை மாற்றி அதன் தொடர்புடைய இதர அனைத்து மின் உபகரணங்களையும் புதிதாக மாற்றியமைத்து எரியவிடும் பணிகளை தனியார் பங்களிப்பு முறையில் (PPP) தகுதியுள்ள நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலை பெறும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.180</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**2) <u>ம.பொ.4/7311/12</u>**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்ட காரணத்தினால் கூடுதலாக 28 வார்டுகள் உருவாக்கப்பட்டு தற்போது 100 வார்டுகளாகளாகவும் 147 ச.கி.மீ பரப்பளவும் கொண்ட மாநகராட்சியாக அமையப்பெற்றுள்ளது. புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் மாநகராட்சியின் பழைய பகுதிகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை செய்ய கீழ்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. இத்திட்டங்கள் மாநில அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டு திட்டத்தின் மூலமாகவோ, அல்லது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II ன் மூலமாகவோ மதுரை மாநகராட்சிக்கு திட்டங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

| வ எண் | திட்டத்தின் பெயர் | நிதி பெற உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | நகர அபிவிருத்தி திட்ட அறிக்கை | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 2 | புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 3 | புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 4 | மாநகராட்சியின் பழைய பகுதிகளுக்கு குடிநீர் குழாய் அமைக்கும் திட்டம் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 5 | மாநகராட்சிக்கு கூடுதலாக தேவைப்படும் குடிநீருக்கு காவேரி நதியிலிருந்து அல்லது வைகை நதியிலிருந்து அல்லது தாமிரபரணி நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 6 | புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டம் | ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டு திட்டம் |
| 7 | மதுரை மாநகரிலுள்ள நீராதரங்களை மேம்படுத்தும் திட்டம் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 8 | புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் | ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டு திட்டம் |
| 9 | புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு | ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டு |

| | | |
|---|---|---|
| | தெருவிளக்கு அமைக்கும் திட்டம் | திட்டம் |
| 10 | மதுரையின் புராதான இடங்களை மேம்படுத்துதல் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 11 | கீழ வெளி வீதி, வடக்கு, மேலவெளி வீதி, தேனி மெயின் ரோடு ஆகிய சாலைகளில் உயர்மட்ட சாலை அமைத்தல் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 12 | நகரின் 11 முக்கிய சாலை சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைத்தல் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 13 | நகரின் 4 முக்கிய இடங்களில் சுரங்க நடைபாதை அமைத்தல் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 14 | உள்வட்ட சாலை அமைத்தல் மற்றும் முக்கிய சாலைகளை அகலப்படுத்துதல் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 15 | சரக்கு வாகனம் நிறுத்துமிடம், அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம் மற்றும் தனியார் பேருந்துகள் நிறுத்துமிடம் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 16 | தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளை இணைத்தல் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |
| 17 | துரித பேருந்து போக்குவரத்து சாலை | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II |

மேற்படி திட்டங்களுக்கு தேவையான திட்ட அறிக்கை தயாரிக்கவும் இதற்கு ஏற்படும் செலவினங்களை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்ட நிதியில் (TNUDP-III) மூலமாகவோ அல்லது நகர் ஊரமைப்பு துறையின் நிதியின் மூலமாகவோ அல்லது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் – II நிதியின் மூலமாகவோ அல்லது TNUFISL நிறுவனத்தின் மூலமாகவோ நிதி பெற்று திட்ட அறிக்கை தயாரித்து மேற்படி திட்டங்களை மத்திய மாநில அரசின் மானியத்தில் நடைபெறும் திட்டங்களின் மூலமாக அமல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.181</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**

**மேயர்**

**மதுரை மாநகராட்சி**

**மதுரை**

**நாள் : 25.04.2012**

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் –1

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள்

தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன்,

தமிழ்நாட்டை வளமான தமிழ்நாடாக,
வலிமை மிக்க தமிழ்நாடாக,

இந்தியாவின் அனைத்து துறைகளிலும், முன்னேறிய முதல் மாநிலமாக உயர்த்திட, பல்வேறு சிறப்பு திட்டங்களை, தொலைநோக்குப் பார்வையோடு, எளிமையாகவும், வேகமாகவும், செயல்படுத்தி பொற்கால புனித ஆட்சியை மக்களுக்கு வழங்கி வருகிறார்.

மதுரையை மீட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், மதுரை மாநகர வளர்ச்சியில், தாய் உள்ளத்தோடு தனிக்கவனம் செலுத்தி, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்த, முன்னுரிமை அளித்து வருவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியாக உள்ளது.

மதுரை மாநகராட்சியில், கடந்த ஆட்சிக் காலத்தில், நிர்வாகச் சீர்கேடுகளால், மதுரை மாநகராட்சியின் நிதிநிலைமை அதலபாதாளத்திற்கு தள்ளப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை மாநகராட்சியின் வளர்ச்சிக்காக **ரூ.250-கோடி சிறப்பு நிதி** ஒதுக்கீடு செய்து மதுரை மக்களை மனம் குளிர செய்துள்ளார்.

மதுரை மாநகராட்சி தோன்றிய காலம் தொட்டு மாநகராட்சி வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில் மதுரை மாநகராட்சியின் வளர்ச்சிக்காக ரூ.**250 கோடியை சிறப்பு நிதியாகத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பிலும் மதுரை மக்களின் சார்பிலும் மதுரை மக்களின் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாமன்றத்தீர்மானம் எண்.182

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் – 2

தமிழ்நாட்டு மக்கள் **“ எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் ”** என்ற உயர்ந்த குறிக்கோளை அடைந்திட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் **அம்மா** அவர்கள் **தொலை நோக்குத் திட்டம் - 2023** என்ற மகத்தான திட்டத்தை வகுத்து தமிழக மக்களுக்கு வளமான வாழ்க்கைக் கிடைத்திட தாயுள்ளத்தோடு முடிவெடுத்துள்ளதை அனைவரும் அறிவோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் **அம்மா** அவர்களின் **தொலைநோக்குத் திட்டம் 2023** தமிழகத்தில் **2000** கிலோமீட்டர் சாலைகள் 8-வழிச்சாலைகளாகவும், 16,000 கிலோமீட்டர் சாலைகள் இருவழிச்சாலைகளாகவும் மாற்றப்பட்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் வளம்பெறும். இத்தொலைநோக்குத் திட்டத்தின் வாயிலாக வரும் **10** ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கூடுதலாக **20,000** மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் **அம்மா** அவர்களின் **தொலைநோக்குத் திட்டம் 2023–ன்** வாயிலாக தமிழகம் விவசாயம், அறிவியல், மருத்துவம், சுகாதாரம், தொழில்துறை, கல்வி ஆகிய பலதுறைகளிலும் வளர்ச்சியடையும்.

**“ செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்டைய வேந்தன்**
**கவிகைக்கீழ் தங்கும் உலகு”**

**“ குறைகூறுவோரின் சொற்களை செவிகைக்கும் நிலையிலும்**
**பொறுக்கின்ற அரசனுடைய குடைநிழலில் உலகம் தங்கும்”**

**தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ** கொண்டு வந்து, தமிழக மக்கள் பல்வளமும் பெற்று பார்போற்றிட வாழ்வதற்கு வழிகண்ட மாண்புமிகு.தமிழக முதல்வர் இதயதெய்வம் **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பில் கோடானகோடி, நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாமன்றத்தீர்மானம் எண்.183